கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்

# கல்வாரி தொனி

"நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்"

இதோ சீக்கிரமாய் வருகிறேன். வெளி. 22:11,12

VOL 2 **15th SEPTEMBER 2009** ISSUE - 9

# "இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"

ரோமர் 12:1

# "THIS IS YOUR SPRITUAL ACT OF WORSHIP"

Romans 12:1

CALVARY GOSPEL MINISTRIES, P.O. BOX No. 8, UDUMALPET-642 126

ஆசிரியர் கடிதம்....

பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

இந்த உலக வேஷத்தின் முடிவு வேளைக்குள் வந்திருக்கிற நாம் ஒவ்வொருவரும் இன்னும் அதிகமதிகமாக தேவனுடன் சஞ்சரிக்க பிரயாசப் படுவோம். நாம் ஒவ்வொருவரும் வெறும் விசுவாசிகளாய் மட்டுமல்ல சீஷர்களாக பணியாற்றவும் அழைக்கப்பட்டுள்ளோம் (மத். 28:19). இந்த நாட்களில் சுவிசேஷம் எங்கும் சென்றடைவதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவரும் செயல் படவேண்டும். நாம் அனுதினமும் சந்திக்கிற அல்லது பழகுகிறவர்கள், நம்முடைய இல்லங்களுக்கு அருகில் வசிக்கிறவர்கள், நம்முடன் வேலை செய்கிறவர்கள், நம்முடன் வியாபாரத் தொடர்பு வைத்திருக்கிறவர்கள், நம்முடன் படிக்கிறவர்கள் என அனைவருடைய ஆத்துமாக்களுக்கும் நாமே நியாயத் தீர்ப்பு நாளில் கணக்கொப்புவிக்க வேண்டும். பட்டயம் வருவதைக் கண்டும் எக்காளம் ஊதாத காவற்காரன் கையிலேதான், ஆண்டவர் ஜனங்களின் இரத்தப்பழியை கேட்பார் என்று வேதம் கூறுகிறது. எசே. 33:5,6; அப். 20:27. இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவருமே காவலாளர்கள் என்பதை மறக்கவேண்டாம். ஆம் பட்டயம் தீவிரித்து வருகிறது "**நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து; நீ அவர்களுக்கு காவலாளனாயிரு**" (எசே. 38:7) என்று ஆண்டவர் கூறுகிறார். கடந்த மாத கேள்விக்கான விடை "**லூக்கா 31:51**". சரியான விடைகள் அனுப்பி பரிசு பெற்றவர்கள் Mrs. Rosy Winston, Madurai, Mrs. Roseline Rajan, Chennai, Mrs. Enitha Jeyachandran, Coimbatore. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

இப்படிக்கு,
கிறிஸ்துவின் பணியில்,
**S. அஷோக் சாமுவேல் - உடுமலை**

# “நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்கிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை”

தேவபிள்ளைகளாகிய நம்மோடு கர்த்தர் இம்மாதம் இவ்வசனத்தின் மூலமாக இடைபடுவாராக. இன்றைக்கு எங்குமே **ஆராதனை** (Worship) என்கிற இந்த சொல் அதிகமாக பயன்படுத்தப் படுவதை நாம் பார்க்க முடிகிறது. “ஆராதனை” என்கிற வார்த்தையைப் பயன்படுத்தி அநேகம் பாடல்களும் வெளிவந்துக் கொண்டிருக்கிறது. இந்த ஆராதனை என்கிற வார்த்தையின் கருத்தை நாம் வேதவசன வெளிச்சத்தில் நாம் இம்மாதம் தியானிக்க கர்த்தர் கிருபை செய்வாராக.

முதலாவதாக ஆராதனை என்கிற வார்த்தைய கர்த்தர் யாத்திராகமம் புஸ்தகத்திலே பயன்படுத்தியுள்ளார். வேதாகமத்தில் யாத். 3:12-ல் **“நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்த பின் நீங்கள் மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்”** என்று கர்த்தர் கூறுகிறார். முதலாவதாக ஒரு மனிதன் கர்த்தரை ஆராதிக்கிறவனாக மாறும் முன் எகிப்திலிருந்து வெளியேற வேண்டும். உடனே சபைவிட்டு சபை ஓடுவதல்ல, ஒரு பாஸ்டரை விட்டு மற்ற பாஸ்டரிடம் ஓடுவது அல்ல. அதாவது எகிப்து என்னும் பாவ அடிமைத் தனத்தில் இருந்து வெளியேற வேண்டும். இன்று அநேகர் பாவ அடிமைத்தனத்தில் தொடர்ந்து வாழ்ந்துகொண்டு அதிலிருந்து வெளியேற கொஞ்சமும் மனமில்லாமல் நாங்கள் கர்த்தரையே ஆராதிக்கிதறோம் என்று கூறுவது பித்தலாட்டமாகும். அதேசமயம் எகிப்திலிருந்து வெளி வருவது மட்டுமே ஆராதனையாகாது, தேவனுக்கு நம்மை அடிமைகளாக ஒப்புக்கொடுக்க வேண்டும். ஏனென்றால் வேதம் கூறுகிறது ரோமர் 6:22 **“இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்,”** ஆம், நாம் நம்மை தேவனுக்கு அடிமைகள் என்று ஒப்புக்கொடுப்பதுதான் ஆராதனையின் ஆரம்பம். எகிப்தைவிட்டு, பாவத்தைவிட்டு வெளியே வராமல் தேவனை ஆராதிக்க முடியாது என்பதை முதலாவது நினைவில் கொள்வோம்.

அடிமை (Slave) என்கிற வார்த்தையின் அர்த்தத்தை நாம் நன்றாக விளங்கிக்கொள்ள வேண்டும். **அடிமைகள் எப்பொழுதும் எஜமானின் கட்டளை எதுவாயிருப்பினும் அதை செய்து முடிப்பார்கள்.** அடிமைகளுக்கு எவ்விதமான உரிமைக்குரல்களும் கிடையாது. அதே சமயம் அடிமைகளுக்கு வேண்டிய உணவு, உடை, பாதுகாப்பு போன்ற காரியங்களை எஜமானே செய்துகொடுக்க கடமைப்பட்டுள்ளார். இன்றைக்கு அநேகருக்கு பரம எஜமானனின் ஆசீர்வாதங்களும், பராமரிப்பும், சுகமும், பாதுகாப்பும் தங்களுக்கு தேவை என்று வாஞ்சித்து கதறுகிறார்கள். ஆனால் தங்களை தேவனுக்கு முழுமையாக அடிமைகாளக ஒப்புக்கொடுக்க விருப்பமில்லை. தேவனுக்கு ஒப்புக்கொடுப்பதற்கு நாம் சிறந்த உதாரணமாக இயேசுவின் தாயாகிய மரியாளைப் பார்க்கலாம். அவர்களிடம் தேவதூதன் கிறிஸ்துவின் பிறப்பைக் குறித்து கூறின உடனே அவர்கள், **“இதோ நான் ஆண்டவருக்கு அடிமை”** (லூக்கா. 1:38) என்று ஒப்புக் கொடுத்தார்கள். இனி தனக்கு ஏற்படக்கூடிய நிந்தைகள், புறக்கணிப்புகள் எல்லாவற்றையும் சகிப்பதற்கு தன்னை முழுமையாக ஒப்புக்கொடுத்தார்கள். மரியாளைப் போல தன்னை முழுமையாக ஆண்டவருக்கு அடிமைகளாக ஒப்புக்கொடாமல் வெறும் உதடுகளால் மட்டும் அவர்களைப் புகழ்வதில் அர்த்தமேதுமில்லை. ஆம் எகிப்திலிருந்து முதலாவதாக வெளியே வரவேண்டும். இதோ ஆண்டவருக்கு அடிமை என்று நாம் ஒப்புக்கொடுக்க வேண்டும். **“இயேசு கிறிஸ்துவும் அடிமையின் ரூபமெடுத்தார்”** என்றே வேதம் கூறுகிறது. (பிலி. 2:7).

ஆராதனை, தொழுதுகொள்ளுதல் (Worship, Service) ஆகிய வார்த்தைகளுக்கு ஒரு சிறந்த விளக்கம் கொடுக்க வேண்டுமானால், ஒரு தேவ மனிதர் இப்படியாக கூறுகிறார், "Anything we do, that brings pleasure to God is worship". **நாம் செய்கிற ஏதாவது ஒரு செயல் அது தேவனுக்கு மகிமையையும், புகழ்ச்சியையும், சந்தோஷத்தையும் கொண்டு வருமானால் அதுவே ஆராதனை என்னப்படும்**. ஆனால் நாம் தொடர்ந்து எகிப்திலிருந்துக் கொண்டு நாம் செய்கிற ஆராதனை தேவனுக்கு அருவருப்பானதே. ஒருவேளை நாம் சபைக்கூடுகைகளுக்கு சரியாக செல்லலாம், தசமபாக காணிக்கைகளை ஒழுங்காக கொடுக்கலாம், சுவிசேஷமும் அறிவிக்கலாம், ஊழியமும் செய்யலாம், நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு தேவனுக்கு அடிமைகள் என்று நம்மை ஒப்புக் கொடாதவரை நாம் செய்கிற அனைத்துமே அக்கிரமமே (மத். 7:23). நம்முடைய ஒவ்வொரு செயல்களுமே தேவனுக்கு மகிமை, புகழ்ச்சி கொண்டுவருகிறதா சிந்தித்துப் பார்ப்போம்.

இன்றைக்கு அநேகர் ஆராதனை Worship என்பது சபை கூடுகையின்போது ஒரு 20 நிமிடம் கைகளை உயர்த்தி உதடுகளால் துதிப்பது மட்டுமே ஆராதனை என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் நாம் எகிப்திலிருந்து வெளியேறி, மறு பிறப்படைந்த நாளிலிருந்தே நாம் தேவனை ஆராதிக்கத் துவங்கிவிடுகிறோம். இது நம்முடைய வாழ்நாள் முடியும் வரையிலும் தொடரக்கூடிய ஒரு காரியம். ஒரு காலத்தில் நாம் உலகத்தையும், பிசாசையும் சினிமா நட்சத்திரங்க்ளையும் ஆராதித்துக்கொண்டிருந்தோம், ஆனால் இரட்சிக்கப்பட்ட பின்போ உபாகமம் 6:13ல் கூறப்பட்டுள்ளதுபோல "**உன் தேவனாகிய கர்த்தருக்கு பயந்து அவருக்கே ஆராதனை செய்து**" என்று வாசிக்கிறோம். இதை நாம் லூக்கா 4:8ல் இயேசுகிறிஸ்துவிடம் சாத்தான் வந்து, "**நீர் என்னை பணிந்து கொண்டால் இவைகளையெல்லாம் உமக்கு தருவேன்**" என்று கூறினபோது இயேசு இந்த வசனத்தையே பயன்படுத்தியே தான் சாத்தானை மேற்கொண்டார். ஆம் பிரியமானவர்களே, நம்முடைய சபைக் கூடுகைகள், துதிகள் எல்லாம் ஆராதனையின் ஒரு பகுதி ஆகும். கைகளை உயர்த்துவதும், துதிப்பதும் மட்டுமே ஆராதனையாகாது. இன்னும் சில சபைகளில் ஆராதனை தலைவர் worship leader என்று ஒருவர் இருப்பார். சில கூட்டங்களில் செய்தி ஒருவர், ஆராதனை ஒருவர் என்று அறிவிப்பார்கள். இதெல்லாம் மனுஷிக கண்டுபிடிப்புகளே. செய்தி, பாடல் துதிகள், கைகளை உயர்த்துதல், காணிக்கை கொடுப்பது எல்லாம் ஆராதனையின் ஒரு அம்சமே. ஆனால் இன்று அநேகர் வாரத்தில் ஒருநாள் இப்படிப்பட்ட காரியங்களை செய்துவிட்டு ஆராதித்துவிட்டோம் என்று திருப்திப்பட்டு தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். மற்ற ஆறுநாட்களும் மனம்போல வாழவும், சண்டை போடவும், பொய்பேசவும், புறங்கூறவுமே செய்கிறார்கள். அது மட்டுமல்லாமல் நாள் நட்சத்திரமும், நல்லநேரம், கெட்டநேரம், முகூர்த்தம் பார்க்கும் விக்கிரகாராதனை கிறிஸ்தவர்களாகவும், வரதட்சணை கேட்டுப் பெறுவதுமாக (நகை அணியாவிட்டால் ரொக்கமாகவும், நிலமாகவும், வாகனமாகவும் வாங்கிக்கொள்வார்கள்). **சாத்தானை ஆராதித்துவிட்டு**, ஞாயிற்றுக்கிழமை மட்டும் இயேசுவே உம்மை ஆரதாதிக்கிறோம் என்றால் எத்தனை மாய்மாலம்? மனந்திரும்புவோம்.

நாம் ஒவ்வொருவருமே கர்த்தரை கெம்பீரமாக பாடவும் (சங். 95:1) அவரை எக்காலத்திலும் (ஒருநாள் அல்ல) ஸ்தோத்தரிக்கவும் (சங். 34:1), ஊழியங்களுக்கு காணிக்கைகள் கொடுக்கவும், ஓசையுள்ள கைத்தாளங்களோடும் தேவனைத் துதிக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. இதையே வேதாகமத்தில் உபாகமம் 6:13ல் "**தேவனாகிய கர்த்தருக்கு பயந்து அவருக்கே ஆராதனை செய்ய வேண்டும்**" என்று, இவ்வசனத்தில் ஆராதனைக்கு முன்பாக கர்த்தருக்கு பயப்படுதலைக் குறித்து நாம் பார்க்கிறோம். இதையே சங்கீதம் 2:11ல் "**பயத்துடனே கர்த்தரை சேவியுங்கள், நடுக்கத்துடனே களிகூருங்கள்**" என்று வேதம் கூறுகிறது. ஆனால் இன்றோ, சில இடங்களில் களிகூருகிறோம், ஆராதிக்கிறோம் என்கிற பெயரில் ஒருவர்மேல் ஒருவர் விழுவதும், கீழே வைக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்தை மிதிப்பதும், ஆடைகளைப் பற்றிய சுயநினைவு இல்லாமல் இருப்பதும், விசில் அடித்து ஊளையிடுவதும், மூக்கைத் துடைக்கவும், முக வேர்வையைத் துடைக்கவும், கைகளைத் துடைக்கவும், பயன்படுத்தப்படுத்தப்படும் கைக்குட்டைகளை தலைக்குமேலே உயர்த்தி சுத்துவதும், தேவனுக்கு புகழ்ச்சி கொண்டுவருமோ? வேதம் கூறுகிறது, "**பயத்துடனே களிகூருங்கள்**" என்றே. ஆம் பரிசுத்த ஆவியானவர் மிகக்கிரமமுள்ளவர், அவரைத் துக்கப்படுத்தாதிருப்போம்.

ஒரு கூட்டத்தில் ஒரு ஊழியர் இப்படியாக கூறினார். இயேசு கிறிஸ்து நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார். (அப். 10:38) ஆகையால் நீங்கள் எல்லோரும் நான் பாடுகிற வேளையில் நீங்கள் நிற்கிற இடங்களில் சுற்றவேண்டும் என்று கூறி எல்லோரையும் சுற்ற வைத்துவிட்டார். இதைவிட வேதவசனங்களுக்கு தவறான வியாக்கியானங்கள் அளிக்க கூடுமோ? சிந்தித்துப் பார்ப்போம், வேதாகமத்தில் பிரசங்கி 5:1ல் "**நீ தேவலயத்துக்குப் போகும்போது உன் நடையைக் காத்துக்கொள்; மூடர் பலியிடுவதைப் பார்க்கிலும், செவிகொடுக்கச் சேர்வதே நலம். தாங்கள் செய்வது தீமை என்று அறியாதிருக்கிறார்கள்**" என்று வாசிக்கிறோம். ஆம். பிரியமானவர்களே, ஆகையால்தான் ரோமர் 12:1ல் **புத்தியுள்ள ஆராதனை** என்று கர்த்தர் குறிப்பிடுகிறார். இன்று அவருக்கு தேவையானது எல்லாம் புத்தியுள்ள ஆராதனைதான்.

வேதாகமத்தில் ஆண்டவர் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவந்து சிவந்த சமுத்திரத்தையும் கடந்த பின் சீனாய் மலையிலே வைத்து பிரமாணங்களை கொடுக்கும்போது அதில் அநேக வித பலிகளும் உள்ளடக்கியிருந்தார். இதை நாம் லேவியராகமம் புத்தகத்தில் 1ம் அதிகாரம் முதல் 7-ம் அதிகாரம் வரைக்கும் உள்ள பகுதிகளில் குறிப்பிட்டுள்ள இவைகளெல்லாம் ஆராதனையின் ஒரு பகுதியாக கர்த்தர் ஏற்படுத்தினார். உதாரணமாக பஸ்காவை வருஷந்தோறும் ஆசரிக்க கட்டளையிட்டபோது யாத். 12:25 "**கர்த்தர் உங்களுக்குத் தாம் சொன்னபடி கொடுக்கப்போகிற தேசத்திலே நீங்கள் போய் சேரும்போது இந்த ஆராதனையைக் கைக்கொள்ளக் கடவீர்கள்**" என்று பஸ்காவை ஆசரிப்பதை ஆராதனை என்றே குறிப்பிடுகிறார். ஆனால் இப்படியாக ஒவ்வொரு பலிகளுக்குப் பின் ஒரு கீழ்ப்படிதலையும், தேவ பயத்தையும் எதிர்பார்த்தார். ஆனால் இஸ்ரவேலர்களோ நாளடைவில் பலிகளை ஒழுங்காக செலுத்திவந்தாலும் தேவபயத்தையும், கீழ்ப்படிதலையும் விட்டுவிட்டார்கள். இதனால் இஸ்ரவேலர்களைப் பார்த்து கர்த்தர் ஓசியா 6:6ல் "**பலிகளை அல்ல இரக்கத்தையும், தகனபலிகளைப் பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவையும் விரும்புகிறேன்**" என்று கூறுகிறார். இதையே இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது மத். 23:23ல் "**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்**" என்று கடிந்துகொள்கிறார். ஆம், விசேஷித்தவைகளை விட்டுவிட்டவர்கள் இஸ்ரவேலர்கள், இன்றைய கிறிஸ்தவர்களைப் போலவே.

ஆகையால் தான் கர்த்தர் ஏசாயா 1:11ல் "**உங்கள் பலிகளின் திரள் எனக்கு என்னத்துக்கு**" என்று கர்த்தர் சொல்கிறார். அடுத்ததாக 12ம் வனத்தில் "**நீங்கள் என் சந்நிதியில் வரும்போது, என் பிராகாரங்களை இப்படி மிதிக்க வேண்டும் Trampling என்று உங்களிடம் கேட்டது யார்?** " என்று கர்த்தர் கடிந்துகொள்கிறார். ஆம் நாம் மனம்போல வாழ்ந்து கர்த்தருக்கு துதிபலிகளையும், ஸ்தோத்திரபலிகளையும் தசமபாக காணிக்கைகளையும் கொடுத்துவிட்டால் போதுமா? அவர் கூறுகிறார் **என் பிராகாரங்களை மிதிக்காதே** என்று. இன்று அநேக கிறிஸ்தவர்களின் முறைகேடான வாழ்க்கையின் நிமித்தம், சாட்சி இல்லாத வாழ்க்கையினிமித்தம் கட்டப்பட்டு வரும் தேவனுடைய ராஜ்யம் இவர்களால் மிதிக்கப்படுகிறது. ஆம். "**பலியிடுவதைப் பார்க்கிலும் நீதியும் நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்**" நீதி 21:3 என்று வேதம் கூறுகிறது. ஆம் விசேஷித்தவைகளாகிய நீதியையும், இரக்கத்தையும் சிநேகித்து நாம் தேவனைத் துதிப-கள், காணிக்கைகள் மூலமாக ஆராதிக்கும்போது தேவன் நம்மில் பிரியப்படுவார்.

இன்றைக்கு ஊழியர்களும் இந்த ஆராதனையின் ஒரு பகுதியாகிய துதிகளும், ஸ்தோத்திரங்களும், பரலோகத்தை சந்தோஷப்படுத்தும் என்று ஜனங்களை உற்சாகப் படுத்தி, ஆராதனையின் மற்ற பகுதிகளை ஜனங்கள் காணக்கூடாதவர்களாக மாற்றிவிட்டார்கள். இதையே இயேசுகிறிஸ்து கூறும்போது மத். 15:8,9ல்

“**இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள்; ஆனால் அவர்கள் இருதயமோ எனக்கு தூரமதாயிருக்கிறது. மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்**” என்று கூறுகிறார். ஆம் நம்முடைய எஜமானனின் இருதயத்தை நாம் அறியாமல் நாம் செய்கிற ஆராதனை வீண் என்றே வேதம் கூறுகிறது. இதற்கு முன் மாதிரியாக இயேசு கிறிஸ்துவை எபிரெயர் நிருபத்தில் பரிசுத்த ஆவியானவர் சுட்டிக் காண்பிக்கிறார். எபிரெயர் 10:5-7ல் “**ஆகையால் அவர் உலகத்தில் பிரவேசிக்கும் போது, பலியையும் காணிக்கைகளையும் நீர் விரும்பவில்லை, ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்; சர்வாங்க தகனப-களும், பாவ நிவாரண ப-களும் உமக்கு பிரியமானதல்ல என்றீர், அப்பொழுது நான், தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ, வருகிறேன், புஸ்தக சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்**” என்று வாசிக்கிறோம்.

இந்த வேதப் பகுதியில் தகன பலியைப் பார்க்கிலும் தேவனுக்கு பிரியமானது அவருடைய சித்தத்தை செய்வதே என்று நாம் தெளிவாக பார்க்கலாம். ஆகையால்தான் இயேசுவும், “**என்னைக் குறித்து**” என்று தேவனுடைய நோக்கத்தை அறிவதையே இங்கு குறிப்பிடுகிறார். ஆம் “**என்னைக் குறித்து தேவனின் நோக்கம் என்ன**” என்று நாம் அறிவதற்கே நம்முடைய இருதயம் தேவனிடம் கிட்டி சேர வேண்டும். இயேசுவும் இதோ வருகிறேன் என்று கூறி தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடித்தார். இயேசுகிறிஸ்து இதையே மத்தேயு 9:13ல் “**பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்**” என்று இரக்கத்தைக் குறித்து கற்றுக்கொள்ளும்படி (To learn) இங்கு வலியுறுத்துகிறார். ஆம் இரக்கத்தை கற்றுக்கொண்டு, கீழ்ப்படிய மனதுள்ளவர்களே அவருக்கு உகந்தவர்கள். அப்படிப் பட்டவர்களே தேவனுக்கு மகிமையையும், புகழ்ச்சியையும், கீர்த்தியையும் கொண்டு வருவார்கள். இங்கு பலிகளை விட இரக்கத்தைக் கற்றுக்கொண்டு பாவிகளை மனந்திரும்புகிறதற்கு அழைப்பதையே ஆராதனையின் மற்றொரு பகுதியாக கர்த்தர் கூறுகிறார். பாவிகளைக் குறித்த எந்த ஒரு கரிசனையும் இல்லாத சுயநல கிறிஸ்தவர்களே இன்று பெருகியிருக்கிறார்கள்.

இதையேதான் நாம் ரோமர் 12:1ல் “**உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான பலியாக**” என்று ஆவியானவர் குறிப்பிடுகிறார். நம்முடையவைகளை மட்டும் அல்ல நம்மையே பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதுதான் தேவனுக்கு பிரியமான பலி என்று கர்த்தருடைய வார்த்தை திட்டமாக கூறுகிறது. சிலர் இப்படியாக கூறுவார்கள். இன்றைக்கு ஆராதனை எங்களுக்கு ரொம்ப நன்றாக இருந்தது என்று, ஆனால் உண்மை என்னவெனில் நம்முடைய ஆராதனை தேவனுக்கு பிரியமாக இருந்ததா என்பதுதான். இன்று ஏனோ சத்துரு அநேக விதங்களில் அநேகரை தேவசித்தம் செய்யாதபடி வஞ்சித்து வைத்திருக்கிறான். நன்றாக செயல்படக்கூடிய அநேக கிறிஸ்தவர்களை நீங்கள் - துதித்தால் போதும், எரிக்கோ கோட்டை விழுந்துவிடும் என்று கூறி அவர்கள் செயல்படாதவாறு வெறும் துதிக்கும் கிறிஸ்தவர்களாக மாற்றி விட்டார்கள். ஆனால் உண்மையென்னவெனில் எரிகோ கோட்டை விழுவதற்கு முன் கர்த்தர் அவர்களுக்கு அநேக கீழ்ப்படிதலையும் கட்டளையிடுகிறார் முதலாவதாக யுத்த புருஷர் அனைவரும் எரிகோ பட்டணத்தை ஒரு தரம் ஆறு நாட்கள் சுற்றிவர வேண்டும். இரண்டாவதாக ஏழாம் நாளிலே பட்டணத்தை ஏழு தரம் சுற்றிவர வேண்டும். மூன்றாவதாக பட்டணத்தை சுற்றிவரும் போது ஆர்ப்பரியாமலும், வாயி-ருந்து சத்தம் போடாமலும் இருக்க வேண்டும். நான்காவதாக தான் ஆர்ப்பரிக்க வேண்டும். ஆனால் இன்றோ கீழ்ப்படிதலை விட்டுவிட்டு ஆர்ப்பரிக்க மட்டும் அநேகர் செய்கிறார்கள். இன்னும் சிலர் துதித்து ஆராதித்துக் கொண்டிருப்பதே

பரலோகத்தை சந்தோஷப்படுத்தும் என்றும், ஸ்தோத்திரப்பலிகள் தான் இன்று ஆண்டவருக்கு தேவை என்றும், தங்களை பரிசுத்தமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து பரலோகத்தை சந்தோஷப்படுத்த வேண்டும் என்பதை முற்றிலுமாக மறந்துவிட்டார்கள்.

நாம் பரலோகத்தை சந்தோஷப்படுத்தக்கூடிய காரியங்கள் எது வென்று சிந்தித்து நடப்போம். பிதாவின் வலதுபாரிசத்தில் இருந்த ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து காலங்கள் நிறைவேறினபோது இந்த பூமிக்கு வந்தார். வேதம் கூறுகிறது பிலி. 2:5-7ல் "**கிறிஸ்து இயேசுவி-ருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத் தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்**" என்று. இந்த பகுதியில் கிறிஸ்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற அடிமையின் ரூபமெடுத்தார் என்று வாசிக்கிறோம். அது மட்டுமல்லாமல் தம்மைத்தாமே வெறுமையாக்கினார். இதுவல்லவா பரலோகத்தை சந்தோஷப்படுத்தும் இயேசுகிறிஸ்து யோர்தான் நதியில் யோவான் ஸ்நானகனால் ஞானஸ்நானம் பெறும்போது பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து சந்தோஷத்தோடு "**நீர் என்னுடைய நேச குமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்**" லூக்கா 3:22 என்று கூறினாரே. கிறிஸ்துவின் ஊழிய நாட்களில் தொலைந்துப்போன ஆடுகள் மந்தைக்குள் வருகிறதை சந்தோஷத்தோடே பிதாவாகிய தேவன் மீண்டுமாக "**இவர் என்னுடைய நேசக்குமாரன் இவருக்கு செவிகொடுங்கள்**" (லூக். 9:35) என்று சாட்சி பகர்ந்தாரே, இதுவல்லவா பரலோகத்தின் சந்தோஷம். இதை இயேசு கிறிஸ்து குறிப்பிடும்போது லூக்கா 15:7ல் "**மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று சொல்லுகிறேன்**" என்று லூக்கா 15ம் அதிகாரமாகிய ஒரு முழு அதிகாரத்தையே நமக்கு கொடுத்த பின்னும், இனியும் நாம் இதை பொருட்படுத்தாமல் வேறு காரியங்களில் திருப்திப்பட்டு பரலோகம் சந்தோஷம் அடையும் என்போமாகில் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்கிறோம். ஆம் தேவனுடைய சித்தம் செய்து, காணாமல்போன ஆடுகளை மந்தையில் சேர்ப்பதுமே பரலோகத்தை சந்தோஷப்படுத்தும்.

இளையகுமாரர்கள் வெளியே இருக்கும்வரை அன்பு தகப்பனுடைய வீட்டில் ஆடல் பாடல், விருந்துகள் இல்லை என்பதை நாம் மறக்க வேண்டாம். ஆம் இதனால் தான் ரோமர் 12:1ல் ஆவியானவர் புத்தியுள்ள ஆராதனையை குறிப்பிட்டுவிட்டு அடுத்த 2ம் வசனத்தில் "**தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்**" என்று தேவ சித்தத்தை நிறைவேற்றவே நாம் மறுரூபமாக வேண்டும் என்று வேதம் கூறுகிறது. ஆனால் இன்றோ நாம் இயேசு கிறிஸ்து நம்முடைய கைகளில் ஒப்படைத்து சென்ற பொறுப்புகளை மறந்துவிட்டு நாம் ஆடல் பாடல் என்று களிகூர்ந்து கொண்டிருக்கிறோம். நிச்சயமாக நாம் பெற்று அனுபவிக்கிற இரட்சிப்புக்காக, விடுதலைக்காக நாம் சந்தோஷப்பட வேண்டும். ஆண்டவரை மனதார துதிக்க வேண்டும். அதே சமயம் இந்த **மாபெரும் பாக்கியத்தை இழந்து தவிக்கும் கோடிக்கணக்கான ஜனங்களைப் பார்க்கும்போது அழாமல் இருக்க முடியாதே**. தாவீதைப்போல நாம் ஒருவருமே தேவனை சங்கீதங்களால் புகழ்ந்து பாடி துதிக்க முடியாது. ஆனால் வேதாகமத்தில் தேவனோ தாவீதைக் குறித்து கூறும்போது சிறந்த துதி பாடகன் என்றோ, ஆராதனைக்குழுத் தலைவன் என்றோ குறிப்பிடாமல் அப். 13:22ல் "**ஈசாயின் குமாரனாகிய தாவீதை என் இருதயத்திற்கு எற்றவனாகக் கண்டேன்; எனக்குச் சித்தமானவை களையெல்லாம் அவன் செய்வான்**" என்று கூறுகிறார். அம் தாவீதின் வாழ்க்கையில் துதிகள் ப-கள், பாடல்கள் இருந்தது மட்டுமல்லாமல் அவர் தேவனுடைய சித்தத்தை செய்கிறவராக காணப்பட்டார். ஆகையால்தான் அவரை கர்த்தர் என் **இருதயத்திற்கு ஏற்றவனாகக்** கண்டேன் என்று சாட்சி பகர்கிறார். அல்லேலூயா.

ஆம் விசேஷித்தவைகளாகிய பரிசுத்தம், ஆத்தும ஆதாயம் ஆகியவைகளை நாம் கற்றுக்கொள்வோம். அப்பொழுது மட்டுமே நம்முடைய வாழ்க்கையே ஒரு புத்தியுள்ள ஆராதனையாக மாறும். நாம் ஒவ்வொருவருமே "**நம்மைக் குறித்த தேவ நோக்கம் என்ன**" என்று தேவனிடம் கேட்டு செயல்படுவோம். இன்றைக்கு எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்றே பிதாவாகிய தேவன் தன்னுடைய குமாரனுடைய வருகையைத் தாமதப்படுத்தி வருகிறார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த பூமியில் வாழும் தன்னுடைய பிள்ளைகள் யாவரும் துரிதமாக செயல்பட வேண்டும் என்றே கர்த்தர் காத்துக்கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட ஒரு அவசரக் காலத்தில் நாம் வேறே எதை எதையோ செய்துகொண்டிருப்போமானால் நிச்சயமாக நாம் தேவ சித்தத்தை நிறைவேற்றி முடிக்க முடியாது. வேதாகமத்தில் மத். 7:21ல் "**பரலோகத்தி-ருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை**" என்று இயேசு கிறிஸ்து திட்டமாக கூறுகிறார். இந்த பூமியில் சுயசித்தத்தின்படி வாழ்ந்துவிட்டு அங்கேயும் வந்து கர்த்தாவே கர்த்தாவே என்று ஆராதித்தோ, துதித்தோ நாம் பரலோகத்திற்குள் பிரவேசிக்கமுடியாது. இதோ ஆண்டவருக்கு அடிமை என்று ஒப்புக்கொடுத்து, தேவசித்தத்தை நிறைவேற்றி முடிப்பவர்களே பரலோகத்தில் பிரவேசிக்க முடியும். ஆகையால்தான் எபேசியர் 5:16,17ல் "**நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப் படுத்திக் கொள்ளுங்கள். ஆகையால் நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்**" என்று வேதாகமம் நம்மை எச்சரிக்கிறது. காலம் கடந்த பின்போ தேவ சித்தம் செய்ய இயலாது.

ஆம் பிரியமானவர்களே, நாம் இந்த கடைசிக் காலங்களில் புத்தியுள்ள ஆராதனை செய்யும்படி ஜாக்கிரதையாயிருப்போம். தேவ சித்தம் செய்யும்படி ஒவ்வொரு நாளும் மறுரூபமாவோம். தாழ்மையின், அடிமையின் சிந்தையுடன் காணப்படுவோம். தொலைந்துபோன ஆடுகளையும் இளையகுமாரர்களையும் கொண்டுவந்து பரலோகத்தை சந்தோஷப்படுத்துவோம். ஆம் இன்று **கண்ணீரோடே விதைப்போமானால் ஒரு நாள் நாம் கெம்பீரத்தோடே அறுப்போம்.** நம்மிடத்தில் அநேக பக்திக்குரிய காரியங்கள் இருப்பினும் கர்த்தர் நம்மைப் பார்த்து இவர்கள் என் இருதயத்திற்கு ஏற்றவர்கள், இவர்கள் எனக்கு சித்தமானதையெல்லாம் செய்வார்கள் என்று சாட்சி பகர முடியுமா? சிந்தித்துப் பார்ப்போம். கள்ளர் கையில் அகப்பட்டு குற்றுயிராக கிடந்த மனிதனை அவ்வழியே வந்த சமாரியன் காயங்களை கழுவி, பராமரித்தானே அதுவல்லவா தேவனுக்கு உகந்த ஆராதனை. பக்கமாய் விலகிப்போன ஆசாரியனும் லேவியனும் என்ன தான் ப-கள் செலுத்தினாலும் அது ஆண்டவருக்கு பிரியமானதல்ல. இன்றைக்கு உங்கள் அருகிலேயே இப்படி குற்றுயிராக கிடக்கும் ஆத்துமாக்கள் இருக்கிறார்களே இவர்களுக்காக நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள். இனியும் பக்கமாய் விலகிப்போகாதீர்கள். சபை கூடுகை நேரத்தில் மட்டுமல்ல, வெளியிலும், வேலை ஸ்தலங்களிலும், வியாபார ஸ்தலங்களிலும், நாம் வாரம் முழுவதும், வருடம் முழுவதும் தேவனை ஆராதிக்கிறவர்களாக காணப்பட வேண்டும். இதைத்தான் தரியு ராஜா சிங்க கெபிக்குள் இருந்த தானியே-டம் "**நீ இடைவிடாமல் ஆராதிக்கிற உன் தேவன் உன்னை சிங்கங்களுக்கு தப்புவிக்க வல்லவராயிருந்தாரா**" என்று கேட்கிறார். ஆம், தானியேல், ராஜாவின் சமூகத்தில் நிற்கும்போதும், வீட்டிலும், சிங்க கெபிக்குள்ளும் தேவனை ஆராதித்தார். இதுவே புத்தியுள்ள ஆராதனை வாழ்க்கை ஆகும். ஆம் பிரியமானவர்களே, நம்மை புத்தியுள்ள ஆராதனை செய்கிறவர்களாக மாற்றும்படி ஜெபிப்போம். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

**S. ASHOK SAMUEL (Evang.)**
Calvary Gospel Ministries
4/693-A, Shankar Nagar,
Dharapuram Road, Udumalpet - 642 126. Tamilnadu, India.
Cell : 94431 82849. e-mail : ashoksamuelcalvary gospel@gmail.com